அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2019

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

**நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

**பகுதி 1 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கும், பகுதி 11 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. "ஆடற்கலை ஆலயங்களைச் சார்ந்து வளர்ந்து வந்துள்ளது." இக்கூற்றினை விளக்குக.

   ஆ. நடராஜ திருவுருவத்தில் சுட்டப்படும் ஐந்தொழில்களின் தத்துவச் சிறப்பினையும், அழகியல் சிறப்பினையும் விளக்குக. (20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

   அ. சிலப்பதிகாரம்
   ஆ. ஒலி அமைப்பு
   இ. நட்டுவாங்கம்
   ஈ. நவசந்தி நாட்டியம்
   உ. டமருக ஜதி (15 புள்ளிகள்)

3. பரதநாட்டியம், மணிப்புரி ஆகிய இரு நடனமரபுகளின் இசை, ஒப்பனை உடை, இசைக்கருவிகள், ஆடல்முறை, அதன் கலாசாரப்பின்னணிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக. (15 புள்ளிகள்)

4. கண்ட ஜாதி மட்டிய தாளத்தில் நான்கு ஆவர்த்தனங்களுக்குக் குறையாத கோர்வை ஒன்றினை கோபுச்ச ஜதியில் நிறைவுறுமாறு தாளாங்கக் குறியீட்டில் எழுதுக. (15 புள்ளிகள்)

(ம.ப.பா)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2019

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)

## பகுதி இரண்டு

**முதலாவது வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

1. அ. அனைத்துலக தமிழ்க்கலை நிறுவக கலைத்திட்டத்தில் பரதநாட்டிய பாடத்தை மாணவர்களுக்கு கற்பித்து அவர்களை தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கு ஒரு நடன ஆசிரியர் கையாளவேண்டிய படிமுறைகளைத் தொகுத்து தருக.

   ஆ. ஐரோப்பிய நாடுகளில் மாணவரிடையே நடாத்தப்படும் நடனப்போட்டிகள் மாணவரின் ஆளுமை, தன்னம்பிக்கை, முயற்சி, நேர்மனப்பாங்கு, கலாசார விழுமியங்கள் ஆகியவற்றில் ஏற்படுத்தும் சாதக, பாதக விளைவுகளைத் தருக.

   (20 புள்ளிகள்)

2. சிறுகுறிப்பு எழுதுக.
   அ. பாடத்திட்டம்
   ஆ. குழுமுறைக் கற்பித்தல்
   இ. அபிநயப்பாடல்
   ஈ. நடனவகுப்பறை
   உ. குருபக்தி (15 புள்ளிகள்)

3. இன்றைய நடன ஆசிரியர்களுடன் குருலக்ஷணத்தில் குறிப்பிடப்படும் நடன ஆசிரியர்கள் நடனம் கற்பிக்கும் முறைகளை ஒப்பீட்டு ரீதியில் விளக்குக. (15 புள்ளிகள்)

4. இறுவெட்டுகள், இணையத்தளங்கள் வாயிலாக பரதக்கலையைப் பயில்வது நிறைவான கற்றலை கற்கும் மாணவர்களுக்கு வழங்கும் அல்லது வழங்கமுடியாது. இந்த இருபக்கக் கருத்துக்களையும் உமது நோக்கில் தருக. (15 புள்ளிகள்)